




அம்பத்தூர் தெற்கு பகுதி 89 வது வட்டத்திற்கு உட்பட்ட பாகம் எண் 256 மற்றும் பாக எண் 258 ஆகிய பாகங்களில் என் வாக்குச்சாவடி.. வெற்றி வாக்குச்சாவடி.. குறித்து அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ (வடக்குப் பகுதிச் செயலாளர்), பி.கே. மூர்த்தி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால், எல்.பி.எஃப். மோகன், சன். முனியாண்டி, டாக்டர் எம்.இ.எஸ்.சந்தீப், கே.பிரபு ஆகியோரின் முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் BLA2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், BDA, BYO, நிர்வாகிகள் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

### மாநில அரசுகளின் வருவாயைக் குறைப்பதற்காகவே

# அடுத்தடுத்து சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருகிறது ஒன்றிய அரசு!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கண்டனம்!

புதுடெல்லி, டிச. 20 –

மாநிலங்களவையில் காப்பீட்டுச் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க., எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:



இந்த மசோதாவின் பெயரை இந்தியில் வைத்திருப்பதற்காக எனது எதிர்ப்பை முதலில் பதிவு செய்கிறேன். இந்த ஒன்றிய அரசு, எந்த திசையில் பயணிக்கிறது என்பதை இவர்கள் கொண்டுவரும் மசோதாக்களில் இருந்தே தெரிந்துகொள்ளலாம். அதிகாரங்களை ஒன்றிய அரசிடம் குவிப்பதும்; மாநில அரசுகளின் அரசமைப்பு ரீதியான மற்றும் நிதி சார்ந்த தன்னாட்சி அதிகாரத்தைப் பறிப்பதும்தான் இந்த அரசின் குறிக்கோளாக இருக்கிறது.

இந்த நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்தை துளியும் மதிக்காமல், மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்காமல், அவர்களுக்கான நிதி இழப்பீடுகள் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் இந்த அரசு செயல்படுவதற்கு இந்த மசோதா சமீபத்திய உதாரணமாக இருக்கிறது.

மாநில அரசின் வருவாயை எப்படிக் குறைப்பது என்பதை மட்டுமே சிந்திக்கக்கூடிய ஆலோசகர்களை இந்த ஒன்றிய அரசு வைத்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஒவ்வொரு சில மாதத்திற்கும் இந்த வகையில் உதிக்கும் எண்ணங்களை மசோதாக்களாக மாற்றி மாநில அரசுகளின் வருவாயை பல வகைகளில் குறைத்துக்கொண்டே வருகிறீர்கள்.

இந்திய நாட்டின் முதுகெலும்பே சுய சேமிப்புதான். ஏழை, நடுத்தர மக்களின் பொருளாதாரப் பாதுகாப்பும் இந்த சேமிப்பில்தான் அடங்கியிருக்கிறது. இந்த சமூகப் பாதுகாப்பை சட்டத் திருத்தங்க ளின் மூலம் விற்பனை செய்வது நியாயமற்றது. இந்த மசோதா சட்டமானால், அதன் விளைவுகள் சாதாரண பொதுமக்களை வெகுவாக பாதித்து, சுய சேமிப்பு என்ற கலாச்சாரத்தையே அழித்துவிடும் ஆபத்து இருக்கிறது.

இந்த மசோதாவின் பிரிவு 7, காப்பீட்டுத்துறையில் நூறு சதவிகித அந்நிய முதலீட்டை அனுமதிக்கிறது. அதாவது நமது காப்பீட்டாளர்களையும் , காப்பீட்டு நிறுவனங் களையும் அந்நியருக்கு தாரை வார்க்கிறது. அதன் உட்பிரிவு, ஒரு இந்திய காப்பீட்டு நிறுவனத்தை அந்நிய நிறுவனம் ஒன்று முழுமையாக கைப்பற்ற வழிவகை செய்கிறது.

வெளிநாட்டு நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு தாங்கள் நினைத்ததை எல்லாம் இந்திய சந்தையில் செயல்படுத்தும். அந்த அந்நியர்களே, காப்பீட்டு பிரீமியம் தொகை, முதிர்வு தொகை போன்ற எல்லாவற்றையும் முடிவு செய்வார்கள். கறுப்புப் பணம் இந்தியாவுக்குள் வருவதற்கு இந்த விதிமுறை வாசல்களைத் திறந்து விடும். ஏற்கனவே பல நிறுவனங்கள் அந்நிய முதலீடு களை திரும்பப்பெற்று இந்தியச் சந்தை தள்ளாட்டத்தில் இருக்கிறது.

மாநில அளவில் ஏற்கனவே, தனிநபர் காப்பீடு, பயிர் மற்றும் கால நடைகளுக்கான காப்பீடு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக விபத்துக் காப்பீடு போன்றவை அமலில் உள்ளன. சாமானிய மக்களுக்கான இத்திட்டங்களை இந்த மசோதா கேள்விக்குரியதாக ஆக்கும். கூட்டாட்சித் தத்துவத்துக்கும் இது ஆபத்தாக முடியும்.

காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டை முழுமையாக அனுமதிப்பதன் மூலம் அத்துறையில் ஏற்கனவே மாவட்ட, தாலுகா வாரியாக வேலை வாய்ப்பில் உள்ள காப்பீட்டு நிறுவன ஊழியர்கள் வேலையை இழக்கும் அபாயமும் உள்ளது. வெகுஜன மக்களின் காவலனாக உள்ள எல்.ஐ.சி.யின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தீர்களா?

அந்நிய முதலீடு வந்தால், எல்.ஐ.சி.யைப் போல அவர்கள் அரசுத் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்வார்களா? கிராமப்புற மக்களுக்கு முன்னுரிமை தருவார்களா என்பதும் கேள்விக்குறிதான். போட்டியை வளர்ப்பது நல்லதுதானே என்று அரசு சொல்லலாம். உண்மையில், இது எல்.ஐ.சி., ஜி.ஐ.சி. போன்ற பொதுத்துறை நிறுவனங்களை ஊனமாக்கும் செயலாகும்.

கிராமப்புற ஏழைகள், பெண்கள், விவசாயிகள் தங்கள் காப்பீட்டுத் தேவைக்காக அணுகும்போது தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் அவர்களை நிராகரிக்கிறார்கள். அவர்களுக்கு ஆபத்பாந்தவனாக இருப்பது எல்.ஐ.சி.தான். அதையும் முடக்கப்பா ர்க்கிறீர்கள்.

கடந்த 9 ஆண்டுகளில் 6.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அந்நிய முதலீடாக ஈர்க்கப்பட்டுள்ளது. நூறு சதவிகித அந்நிய முதலீட்டை அனுமதிப்பதன் மூலம் அடுத்த ஒன்பது ஆண்டுகளில் இது 12 பில்லியன் டாலர்களாக உயரும் அதாவது அவர்களின் மார்க்கெட் மதிப்பு 600 பில்லியன் டாலர்களாக உயரும். இது பகல் கொள்ளை இல்லாமல் வேறென்ன? பொதுத்துறை நிறுவனங்களின் வாய்ப்புகளையும் வருமானத்தையும் அரசே அழிக்கக் கூடாது.

முதலாளித்துவம் இந்தச் சமூகத்தை ஆளும்போது, மனிதநேயம் பலிகொடுக்கப்படும் என்று தந்தை பெரியார் சொன்னதை இங்கே நினைவுகூர்கிறேன். இந்த மசோதாவில் உள்ள பிரிவு 27, அதைத்தான் உறுதிப்படுத்துகிறது, அந்நிய நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு கட்டாயமல்ல என்றால், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? அப்படியானால் பெரியார் சொன்னது உண்மை தானே?

மாநில சுகாதாரக் கட்டமைப்பில் காப்பீடு பெரும் பங்கு வகிக்கிறது. ஆனால் இந்தச் சட்டத் திருத்தம் பற்றி மாநில அரசுகளுடன் ஆலோசிக்க மறுக்கிறீர்கள். இந்த மசோதாவின் ஒரு பிரிவுகூட, மாநில அரசுகளின் தன்னாட்சி அதிகாரம், கூட்டாட்சித் தத்துவத்தின் முக்கி யத்துவம் பற்றி கவலைப்படவில்லை.

திராவிட மாடல் ஆட்சியின் ஆணிவேரான பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘ஏழைகள், வறியவர்களை பாதுகாக்கத்தான் அரசு இருக்கிறதே தவிர, பலமானவர்களை மேலும் பலமாக்க அல்ல’ என்று சொன்னதையும்; ஒழுக்கமில்லாத சந்தை ஜனநாயகத்தை அழிக்கும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்போதும் சொல்வதையும் இங்கே நினைவுபடுத்து கிறேன்.

இவற்றை மனதில்வைத்துதான், இந்த மசோதா ஆதரவற்ற ஏழைகளை பலவீனப்படுத்தி, ஏற்கனவே வளமானவர்களை மேலும் வளமாக்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எச்சரித்ததைதும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏழைகள் வியர்வை சிந்தி உழைத்த பணம் அந்நிய சக்திகளிடம் போய்ச் சேரக் கூடாது. அந்நியர்களுக்கான காப்பீட்டுக் காலனியாக இந்தியா மாறிவிடக் கூடாது. ஆகவே இந்த மசோதாவைத் திரும்பப்பெற வேண்டும். அல்லது ஸ்டாம்ப் டியூட்டி, மாநில அரசுக்கான ஜி.எஸ்.டி., போன்றவை மூலம் வரும் மாநில வருவாயைப் பாதுகாக்கும் வகையில் சட்டப் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும்.

இந்திய மக்களின் காப்பீட்டு உரிமை மற்றும் பணத்தை பாதுகாக்கும் வகையிலான பிரிவுகள் சேர்க்கப் பட வேண்டும். இதுபோன்ற சட்டத் திருத்தங்கள் பற்றி ஆராய மத்திய மாநில அரசுப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒழுங்குமுறைக் குழுவை அமைக்க வேண்டும்.

இவற்றைச் செய்ய மறுத்தால், இந்த மசோதாவை நிலைக்குழு வின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் என்ற வள்ளுவரின் வார்த்தைகளை மதித்து இந்த அரசு நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.





துணைமுதல்வர், உதயநிதி ஸ்டாலின், பிறந்த நாளை முன்னீட்டு, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, இலக்கிய அணி அமைப்பாளர் சி.மூர்த்தி தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.எஸ். ராஜ், இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் மு.சீனிவாசன், வட்ட செயலாளர். எஸ்.என்.கே.ராமன் ஆகியோர் முன்னிலையில், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, பிரியாணி மற்றும் நோட்டு, புத்தகங்களை வழங்கினார். உடன் கி.தம்பிதுரை, வயலட்மேரி, ஜெ.வரதன், எம்.பார்த்தீபன், ஆர்.சிவகுமார், எஸ்.ஆடலரசு, கே.ராஜேந்திரன், ஆர்.செந்தில், ஆர்.ராஜேந்திரன், ஆகியோர் கலந்து கொன்டனர்.




ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாகம் எண் 16, 20, 26, மண்டல குழு தலைவர் வட்ட கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்கினார்.இதில் கோவிந்தராஜ், கே.சி.ராஜா, ஏ.முருகேசன், எஸ்.கிருஷ்ணன், கே.எஸ்.பாலமுருகன், ப.தாமோதரன், எஸ். ஜான்கென்னடி, எஸ்.பி.டி.ஷேக், ஏ.ஆனந்தன், ராஜா, எம்.பி.பாலு, எஸ்.கமருதின், எஸ்.தமிழ்ச்செல்வன், பி.பாப்பா, பிஎல்ஏ2, பிஎல்சி, பிடிஏ, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதிகளில்

# BLA-2 BDA-BLC மற்றும் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், திருப்பெரும்புதூர் - பல்லாவரம் - தாம்பரம் - செங்கல்பட்டு- திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காகளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலை ஒன்றிய- நகர- பகுதி- பேரூர் வாரியாக பிரித்து வழங்க உள்ளோம்.

வரைவு வாக்காளர் பட்டியலை பெற்றுக் கொண்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக பாகம் வாரியாக பிரித்து வார்டு - கிளைச் செயலாளர்கள் மூலம் அந்தந்த பாக BLA -2 வசம் உடனே ஒப்படைத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பூத் வாரியாக பிரித்துதரப்படும் வரைவு வாக்காளர் பட்டியலுடன், இறந்த - இடம் மாறிய - கண்டுபிடிக்க முடியாத வாக்காளர்களின் விவரங்கள் அடங்கிய ASD பட்டியலையும் சேர்த்து எடுத்துக்கொண்டு,

அந்த பூத் BLA-2 + BDA + BLC மற்றும் கழகத்தினருடன் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்திடும் இன்றியமையாப் பணியில் உடனே ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

சரிபார்த்து வரைவு வாக்காளர் பட்டியலில் விடுப்பட்ட வாக்காளர்களையும், 18-வயது நிரம்பிய புதிய வாக்காளர் பெயர்களையும், புதிதாக இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் படிவம் 6-ல் சேர்த்திடும் முக்கியப் பணியில் கழகத்தினர் அனைவரும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பூத் வாரியாக ASD பட்டியலை சரிபார்க்கும் போது உண்மையாக உள்ள வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அவர்களது பெயர் மீண்டும் அந்த பூத் வாக்காளர் பட்டியலில் சேர்த்திட படிவம் 6-ல் பூர்த்தி செய்து தருவதற்கு உரிய உதவிகளை செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் போது இறந்தவர்கள் - இடம் மாறியவர்கள் பெயர்கள் மீண்டும் இடம் பெற்றிருந்தால், அந்தந்த பூத் BLA-2 படிவம் -7-ல் பூர்த்தி செய்து அவர்களை நீக்கம் செய்திடும் பணியில் ஈடுபட வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களில் 2002/2005 S.I.R சரிபார்ப்பில் Match ஆகாதவர்களுக்கு அந்தந்த தொகுதி தேர்தல் அலுவலர்கள், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை வழங்கிட வேண்டும் என்று BLO மூலம் நோட்டீஸ் வழங்கினால் அந்தந்த BLA-2 அது சம்பந்தமாக அந்த வாக்காளர்களிடம் இருந்து ஆவணங்களை பெற்று BLO வசம் ஒப்படைத்திடும் பணியில் ஈடுபட்டு அவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள், BLA-2 - BLC - BDA - வழக்கறிஞர் அணி மற்றும் கழகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து இருகரம் கோர்த்து, இந்த இன்றியமையாத பணியை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று அனைவரையும் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இந்த வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கழகத்தினர் அனைவரும் கவனத்தில் கொண்டு ஒற்றுமையாக இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டும் என்று மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சீ.பத்மபிரியா சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய வாக்குச்சாவடி செயல்வீரர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு! ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், டிச.20

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் ,கொளப்பாக்கம் ஊராட்சியில் இன்று (20.12..2025 சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் வாக்குச்சாவடி எண் : 125ல் மாலை 06.00 மணியளவில் கோவூர் ஊராட்சி வாக்குச்சாவடி எண் : 47ல் செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் மற்றும் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் திருமதி சீ.பத்மப்ரியா சிறப்புரையாற்ற உள்ளனர்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தே மாதரம், தலைமை பொதுக்கு உறுப்பினர் கே.எத்திராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், இளைஞரணி மகளிர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் அந்தந்த வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் இனமானப் பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், கே.எஸ்.மணி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, பரிமளம் விஸ்வநாதன், வெ.அண்பு வாணன், ராபர்ட் ராஜதுரை, ஏ.கே.சுரேஷ், ஏ.ஆர்.டி.உதயசூரியன், டி.கே.சந்திரசேகர், ஆ.சக்திவேல், ஆ.ராஜா, முரளிதரன், வே.ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், நிலவழகன், ருக்மணி மோகன்ராஜ், ஜி.பி.வெங்கடேசன், க.சம்பத், கோபி, ரமேஷ், முகமது அலவி, ஜெயலலிதாசசிதரன், பா.து.தமிழரசன், எம்.டி.ஜி.கதிர்வேல், அலெக்ஸாண்டர், மணிமாறன், டி.கே.முனிவேல் , கன்னிமுத்து, மா.தீபன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




சேலம்,அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பாக கிறிஸ்துமஸ் விழா மற்றும் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் மேயர் அ.ராமச்சந்திரன், தி.மு.க. மாற்றத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ. தங்கம் ஆகியோர் பங்கேற்று கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் காவல் துறை துணை ஆணையர் என்.வி.சிவராமன் ஐ.பி.எஸ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பி. செண்பகவல்லி, சங்க இணைப் பொதுச் செயலாளர் திருக்குவளை என். அம்பாள்குமார், அறக்கட்டளையின் தலைவர் பி. மணிகண்டன் மற்றும் ஏராளமான மாற்றுத்திறனாளிகளும், தன்னார்வலர்களும் பங்கேற்றனர்.